25 JUL 2017

03/08/17

029134

**சுருக்கம்**

உயர்கல்வி – கல்லூரிக் கல்வி – 2017–18ஆம் கல்வியாண்டு முதல் கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில், திருவாரூர் மாவட்டம் குடவாசல், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் (மகளிர்), நாகப்பட்டினம் மாவட்டம் சீர்காழி, ஈரோடு மாவட்டம் திட்டமலை, வேலூர் மாவட்டம் மாதனூர், திருப்பூர் மாவட்டம் பல்லடம் ஆகிய ஏழு இடங்களில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி தொடங்குவதற்கு அனுமதி மற்றும் அக்கல்லூரிகளுக்கு ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லா பணியிடங்கள் ஒப்பளிப்பு, தொடரும் மற்றும் தொடரா செலவினத்திற்கு நிதி நிர்வாக ஒப்பளிப்பு செய்தல் – ஆணைகள் வெளியிடப்படுகிறது

உயர்கல்வி (ஜி1) துறை

அரசாணை (நிலை) எண்.199

நாள் 24.07.2017
ஹேவிளம்பி, ஆடி 08
திருவள்ளுவராண்டு 2048
படிக்கப்பட்டவை

கல்லூரிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.24286/ க்யூ2/2017, நாள் 10.07.2017.

-------

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 110–இன் கீழ் 19.06.2017 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இதர அறிவுப்புகளோடு பின்வரும் அறிவிப்பினையும் வெளியிட்டார்கள்:–

"மாநிலத்தின் அனைத்து மாவட்டங்களிலும் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றது. மாணவர்கள் நீண்ட தூரம் பயணம் செய்து உயர்கல்வி கற்பதை தவிர்க்கும் பொருட்டும், குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி பெறுவதற்கும் தமிழ்நாட்டின் பல்வேறு மாவட்டங்களில் 7 புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் மற்றும் 3 புதிய பல்கலைக்கழக உறுப்பு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகள் 2017–18–ஆம் கல்வியாண்டில் துவங்கப்படும். இதற்காக அரசுக்கு 100 கோடியே 31 லட்சம் ரூபாய் செலவு ஏற்படும்."

2. மேற்காணும் அறிவிப்பிற்கிணங்க, மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்... இயக்குநர் அனுப்பிய கருத்துருவினை அரசு நன்கு ஆய்வு செய்து, அதன் அடிப்படையில் 2017–18ஆம் கல்வியாண்டு முதல் கடலூர் மாவட்டம் காட்டுமன்னார்கோவில், திருவாரூர் மாவட்டம் குடவாசல், விழுப்புரம் மாவட்டம் விழுப்புரம் (மகளிர்), நாகப்பட்டினம் மாவட்ட... சீர்காழி, ஈரோடு மாவட்டம் திட்டமலை, வேலூர் மாவட்டம் மாதனூர், திருப்பூர் மாவட்ட... பல்லடம் ஆகிய ஏழு இடங்களில் அமையவுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளை... (1) இளங்கலை தமிழ் (B.A. Tamil), (2) இளங்கலை ஆங்கிலம் (B.A. English), (3) இளமறிவியல் கணிதம் (B.Sc. Mathematics) English Medium, (4) இளநிலை வணிகவியல் (B.Com) English Medium மற்றும் (5) இளமறிவியல் கணினி அறிவியல், (B.Sc., Compu... Science) English Medium ஆகிய 5 பாடப்பிரிவுகளுடன் துவங்குவதற்கு அனுமதி...

மேற்கண்ட கல்லூரிகளுக்கு ஆசிரியர், ஆசிரியரல்லா பணியிடங்கள், தொடரும் மற்றும் தொடரச் செலவினங்களை பின்வருமாறு ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது -

(i) மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு கல்லூரிக்கும் கீழ்க்கண்டவாறு 15 ஆசிரியர் மற்றும் 17 ஆசிரியரல்லாத பணியிடங்கள் வீதம் ஏழு கல்லூரிகளுக்குச் சேர்த்து மொத்தம் 105 ஆசிரியர் மற்றும் 119 ஆசிரியரல்லாத பணியிடங்கள் ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது:-

<u>ஆசிரியர் பணியிடங்கள்</u>

| வ. எண் | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | ஒரு கல்லூரியின் பணியாளர்களின் எண்ணிக்கை | 7 கல்லூரிகளின் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | முதல்வர் | ரூ.37,400-67,000 + 10,000 + Special Allowance ரூ.2,000 | 01 | 7 |
| 2 | உதவி பேராசிரியர் | ரூ.15,600 -39, 100 + 6000 | 10 | 70 |
| 3 | மொழி பாடங்களுக்கான உதவிப் பேராசிரியர் | ரூ.15,600-39,100 + 6000 | 02 | 14 |
| 4 | உடற்கல்வி இயக்குநர் | ரூ.15,600-39,100 + 6000 | 01 | 7 |
| 5 | நூலகர் | ரூ.15,600-39,100 + 6000 | 01 | 7 |

<u>ஆசிரியரல்லாப் பணியிடங்கள்</u>

| வ. எண் | பணியிடங்களின் விவரம் | ஊதிய விகிதம் | ஒரு கல்லூரியின் பணியாளர்களின் எண்ணிக்கை | 7 கல்லூரிகளின் பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | நிதியாளர் | ரூ.15,600-39,100 + 5400 | 1 | 7 |
| 2 | கண்காணிப்பாளர் | ரூ.9300-34,800+4800 | 1 | 7 |
| 3 | உதவியாளர் | ரூ.5200-20,200+2,800 | 2 | 14 |
| 4 | இளநிலை உதவியாளர் | ரூ.5200-20,200+2,400 | 2 | 14 |
| 5 | உதவி செய் நிரலர் (Assistant Programmer) | ரூ.9300-34,800 + 4400 | 1 | 7 |
| 6 | தட்டச்சர் | ரூ.5200-20,200+2,400 | 1 | 7 |
| 7 | அடிப்படை பணியாளர்கள் இரவுக் காவலர்-2, அலுவலக உதவியாளர்-2, துப்புரவாளர்-1, பெருக்குபவர்-4 | ரூ.4,800-10,000 +1,300 | 9 | 63 |
| | | மொத்தம் | 17 | 119 |

(ii) இரவு காவலர், துப்பரவாளர் மற்றும் பெருக்குபவர் பணியிடங்கள் வெளி முகமை (Oursourcing) மூலம் நிரப்பப்பட வேண்டும்.

(iii) பின்வருமாறு தொடரும் செலவினமாக (தொலைபேசிக் கட்டணம் (ம) மின் கட்டணம் நீங்கலாக) ஒரு கல்லூரிக்கு ரூ.92,79,000/– வீதம் 7 கல்லூரிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.6,49,53,000/– மற்றும் தொடராச் செலவினமாக ஒரு கல்லூரிக்கு ரூ.31,13,000/– வீதம் 7 கல்லூரிகளுக்கும் சேர்த்து மொத்தம் ரூ.2,17,91,000/– நிதி ஒப்பளிப்பு செய்யலாம்.

| வ. எண் | விவரம் | ஒரு கல்லூரிக்கான தொகை (ரூபாய்) | 7 கல்லூரிகளுக்கான தொகை (ரூபாய்) |
|---|---|---|---|
| தொடரும் செலவினம் | | | |
| 1. | அலுவலக செலவினம் | 50,000 | 3,50,000 |
| 2. | 15 ஆசிரியர் பணியாளர்கள் மற்றும் 17 ஆசிரியரல்லாத பணியாளர்களுக்கு சம்பளம் | 92,29,000 | 6,46,03,000 |
| | மொத்தம் | 92,79,000 | 6,49,53,000 |
| தொடரா செலவினம் | | | |
| 1. | மரத்தளவாடங்கள் | 5,00,000 | 35,00,000 |
| 2. | புத்தகம் மற்றும் பருவ இதழ்கள் மற்றும் நாளிதழ்கள் | 10,00,000 | 70,00,000 |
| 3. | இயந்திரங்கள் மற்றும் தளவாடங்கள் வாங்குவதற்கு | 5,00,000 | 35,00,000 |
| 4. | 25 கணிப்பொறிகள் மற்றும் 2 லேசர் பிரிண்டர்கள் வாங்குவதற்கு | 11,13,000 | 77,91,000 |
| | மொத்தம் | 31,13,000 | 2,17,91,000 |
| | | பெருமொத்தம் | 8,67,44,000 |

(iv) இக்கல்லூரிகளுக்கு நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு ஒரு கல்லூரிக்கு ரூ.7,97,50,000/– (ரூபாய் ஏழு கோடியே தொண்ணூாற்று ஏழு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) வீதம் 7 கல்லூரிகளுக்கு மொத்தம் ரூ.55,82,50,000/– நிர்வாக அனுமதி வழங்கலாம்.

3. மேலே பத்தி 2 (iii) மற்றும் (iv) -ல் ஒப்பளிப்பு அளிக்கப்பட்டுள்ள கல்லூரிக்கான தொடர் மற்றும் தொடராச் செலவினம் கீழ்க்கண்ட தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்:–

ஆடவர் கல்லூரி

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள் – AA கலைக்கல்லூரிகள் (ஆடவர்)

01 சம்பளங்கள் = ரூ.5,53,74,000/– (த.தொ.கு. 2202 03 103 AA 0109)

05 அலுவலகச் செலவுகள்

02 ஏனைய சில்லரைச் செலவுகள் = ரூ.3,00,000/– (ரூ.50,000/– X 6)
(த.தொ.கு.2202 03 103 AA 0529)

05-05 அறைகலன் = ரூ.30,00,000/– (ரூ.5,00,000/– X 6)
(த.தொ.கு.2202 03 103 AA 0556)

19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் = ரூ.30,00,000/– (ரூ.5,00,000/– X6)
(த.தொ.கு.2202 03 103 AA 1911)

68 புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு = ரூ.60,00,000/– (ரூ.10,00,000/– X 6)
(த.தொ.கு. 2202 03 103 AA 6809)

76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் = ரூ 66,78,000/– (ரூ.11,13,000/– X 6)

(த.தொ.கு. 2202 03 103 AA 7611)

மகளிர் கல்லூரி

2202 பொதுக்கல்வி – 03 பல்கலைக்கழகக் கல்வியும் உயர்கல்வியும் – 103 அரசுக் கல்லூரிகளும், கல்வி நிறுவனங்களும் – மாநிலச் செலவினங்கள் – AB கலைக்கல்லூரிகள் (மகளிர்)

01 சம்பளங்கள் = ரூ.92,29,000/– (த.தொ.கு. 2202 03 103 AB 0107)

05 அலுவலகச் செலவுகள்

02 ஏனைய சில்லரைச் செலவுகள் = ரூ.50,000/–
(த.தொ.கு.2202 03 103 AB 0527)

05-05 அறைகலன் = ரூ.5,00,000/–
(த.தொ.கு.2202 03 103 AB 0554)

19 இயந்திரமும் சாதனமும் – 01 வாங்குதல் = ரூ 5,00,000/–
(த.தொ.கு.2202 03 103 AB 1919)

68 புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள், சிலேட்டுகள் முதலியவற்றிற்காகும் செலவு = ரூ.10,00,000/–
(த.தொ.கு. 2202 03 103 AB 6807)

76 கணினியும் துணை பாகங்களும் – 01 வாங்குதல் = ரூ.11,13,000/–
(த.தொ.கு. 2202 03 103 AB 7619)

4. மேலே ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு "புதுத்துணைப் பணி" குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையின் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி, இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச்செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித் (வ.செ.பொ.1) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். எதிர்பாராச்செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை உரிய படிவத்தில் இவ்வரசாணையின்

நகலுடன் நிதித் (வரவு-செலவு-I) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2017–18ஆம் ஆண்டிற்கான துணை மானியக் கோரிக்கையில் சேர்ப்பதற்கு தவறாது உரிய நேரத்தில் நிதித் (வ.செ.பொ.1) துறைக்கு அனுப்பி வைக்குமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அறிவுறுத்தப்படுகிறார்.

5. மேலே ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ள கல்லூரிக்கான தொடர் மற்றும் தொடராச் செலவில் உடனடி தேவையை நிர்ணயித்து அத்தொகைக்கான எதிர்பாரா செலவு நிதி முன்பணத்தை பெற்று செலவினத்தை மேற்கொள்ளுமாறு கல்லூரிக் கல்வி இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. இவ்வாணை நிதித் துறையின் கோ.எண்.13 (ADS PK)/கல்வி-I/2017 நாள்.24.07.2017 (ம) அ.சா..எண்.39175/மை.ம.ஆ.பி/2017, நாள்.24.07.2017ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது மற்றும் இதற்கான கூடுதல் நிதியொதுக்கப் பேரேட்டு எண்.1022 (ஆயிரத்து இருபத்து இரண்டு)

(ஆளுநரின் ஆணைப்படி)

சுனில் பாலிவால்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை–6
சார்ந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
சம்மந்தப்பட்ட மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர்
(கல்லூரிக் கல்வி இயக்குநர் வழியாக)
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்
சம்பந்தப்பட்ட கருவூலக் கணக்கு அலுவலர்
மாநில முதன்மைக் கணக்காயர், சென்னை–18
நகல்
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு உயர்கல்வித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை–9.
உயர்கல்வித் துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை–9.
நிதி (கல்வி .I / வ.செ.I / வ.செ.II / மை.ம.ஆ.பி) துறை, சென்னை-9
உயர்கல்வி ( டி / எச் துறை), சென்னை -9.
இ.கோ. / உதிரிகள்

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

சுரேஷ்குமார் 24/7/17
பிரிவு அலுவலர்
24/7/2017